பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

26 02 2026 THURSDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏற்பாடுகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு. **Gyanesh Kumar** இன்று அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

2) தமிழக மக்கள் சார்பாக முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு ரயில்வே அமைச்சகம் விரைந்து நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3) அரசு கல்லூரிகளில் பணிபுரியும் தற்காலிக கௌரவ விரிவுரையாளர்களுக்கு கூடுதலாக 5 ஆயிரம் ரூபாய் ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

4) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மறைந்த மூத்த தலைவர் நல்லக்கண்ணுவுக்கு அரசு சார்பில் இறுதி மரியாதை செலுத்தப்பட்டது.

5) உலகக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஜிம்பாப்வே அணியை எதிர்கொள்கிறது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏற்பாடுகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு. **Gyanesh Kumar** இன்று அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

சென்னையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் திமுக, அஇஅதிமுக, பிஜேபி, காங்கிரஸ் உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அந்தந்த கட்சிகளின் சார்பாக பிரதிநிதிகள் தங்களது விருப்பங்களை தேர்தல் குழுவினரிடம் தெரிவித்தனர்.

பிற்பகல் காவல்துறை உயரதிகாரிகளுடன் இக்குழுவினர் ஆலோசனை மேற்கொண்டனர்.

தேர்தல் ஏற்பாடுகள், பாதுகாப்பு, வாக்காளர்களுக்கான வசதிகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தேர்தல் குழுவினர் மாவட்ட ஆட்சியர்களுடன் நாளை ஆலோசனை மேற்கொள்ளவுள்ளனர்.

<<<<<<>>>>>>

ரயில்வே துறையில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது தொடர்பான ரயில் தொழில்நுட்பக் கொள்கையை, அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இன்று வெளியிட்டார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 52 வாரங்களில் 52 தொழில்நுட்ப கொள்கைகள் என்று அறிவித்திருந்ததை அடுத்து, இந்த கொள்கைகள் இன்று வெளியிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

ரயில்வே-யின் வளர்ச்சிக்காக, புத்தாக்க தொழில் நிறுவனங்களை ஒருங்கிணைத்து செயல்பட, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறிய அவர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம், ரயில் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் என்று தெரிவித்தார்.

ரயில்வே தீர்பாயத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு தீர்வு காண, மின்னணு ரயில்வே தீர்ப்பாயம் தொடங்கப்பட்டுள்ளதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<>>>>>>

நாட்டின் வளர்ச்சிக்கு மகளிர் மற்றும் இளையோரின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று மத்திய அமைச்சர் திரு ஜிதன் ராம் மாஞ்சி கூறியுள்ளார்.

கோவையில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்துறைகளை ஊக்குவிக்க மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சிறப்பாக பணியாற்றிய பேராசிரியர்கள் மற்றும் தேசிய அளவிலான போட்டியில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கு அமைச்சர் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

<<<<<<>>>>>>

மகளிர் அடிப்படையிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருவதாக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி. அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மகளிர் மேம்பாடு தொடர்பான மாநாட்டில் உரையாற்றிய அவர், மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், பொருளாதார சுதந்திரம் அளிக்கும் வகையிலும் பல்வேறு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பிரதமரின் முத்ரா கடனுதவித் திட்டம், புத்தொழில் இந்தியா திட்டம், நடைபாதை வியாபாரிகளுக்கான கடனுதவித் திட்டம் உள்ளிட்ட

திட்டங்கள் மூலம் மகளிர் மேம்பாடு உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வரும் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், மகளிர் நலனுக்கான திட்டங்களுக்கு ஐந்து லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் சுயஉதவிக்குழுக்களுடன் பத்து கோடி மகளிர் இணைக்கப்பட்டுள்ளதாகவும், லட்சாதிபதி பெண்கள் திட்டத்தின்மூலம் 2 கோடி மகளிர் பயனடைந்துள்ளதாகவும் திருமதி. அன்னபூர்ணா தேவி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சென்னை எழும்பூர் — திருச்சிராப்பள்ளி இடையிலான மலைக்கோட்டை விரைவு ரயில் பெண்ணாடம் ரயில் நிலையத்திலும், தூத்துக்குடி — மைசூரு இடையிலான விரைவு ரயில் கடம்பூர் நிலையத்திலும் நின்று செல்ல ரயில்வேத்துறை அனுமதி வழங்கியுள்ளது.

இத்தகவலை தமது சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ள தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், தமிழக மக்கள் சார்பாக முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு ரயில்வே

அமைச்சகம் விரைந்து நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்துள்ளார்.

பெண்ணாடம் மற்றும் கடம்பூர் ரயில் நிலையங்களில், விரைவு ரயில்கள் நின்று செல்வதால், சுற்றுவட்டார பகுதிகளில் வசிக்கும் மக்களின் போக்குவரத்து மற்றும் தொழில் சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்யும் என்று கூறியுள்ளார்.

தமிழகத்திலிருந்து இயக்கப்பட்ட சில சிறப்பு ரயில்களை வழக்கமான விரைவு ரயில்களாக மாற்றும் கோரிக்கையையும் ரயில்வே அமைச்சர் ஏற்றுக்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவின் ஷாலிமர் — எம் ஜி ஆர் சென்னை சென்டரல், ஹைதராபாத்தின் காச்சிக்குடா — தூத்துக்குடி, ஹைதராபாத் — கன்னியாகுமரி, எர்ணாகுளம் — வேளாண்கண்ணி சிறப்பு ரயில்களை வழக்கமான விரைவு ரயில்களாக மாற்றியமைத்திருப்பது தமிழக மக்களுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக மக்கள் சார்பாக வைக்கப்படும் கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்றித் தந்த பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், ரயில்வே

அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவுக்கும் தமது நன்றியை மக்கள் சார்பில் தெரிவித்துகொள்வதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

நாட்டின் மருத்துவக் கல்லூரிகள், உயிரி மருத்துவ ஆராய்ச்சி மையங்களாக உருவாவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மருத்துவக் கல்லூரிகள் ஆராய்ச்சி தொடர்பான கூட்டத்தில் உரையாற்றிய அவர், இத்தகைய கல்லூரிகளில் மாணவர்கள் ஆராய்ச்சி செய்வதற்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்படும் என்று கூறினார்.

நாட்டின் மருத்துவ ஆராய்ச்சிக்கு வழிகாட்டியாக இந்த இரண்டு நாள் கூட்டம் அமையும் என்று அவர் தெரிவித்தார்.

வரும் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், மருத்துவ ஆராய்ச்சிக்கு முன்னுரிமை அளித்துள்ளதற்காக அவர் பாராட்டு தெரிவித்தார்.

நாட்டின் மருத்துவக் கல்லூரிகளில் ஆயிரத்து 900 ஆராய்ச்சி திட்டங்கள் முடிவடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் மருத்துவத் துறை, மேம்படும் என்று திருமதி. அனுப்பிரியா பட்டேல் கூறினார்.

<<<<<<>>>>>>

அரசு கல்லூரிகளில் பணிபுரியும் தற்காலிக கௌரவ விரிவுரையாளர்களுக்கு கூடுதலாக 5 ஆயிரம் ரூபாய் ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு கோவி. செழியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், வரும் மார்ச் மாதம் ஒன்றாம் தேதிமுதல் இந்த கூடுதல் ஊதியம் வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

இந்த ஊதிய உயர்வு மூலம் மொத்தம் 9 ஆயிரத்து 646 தற்காலிக விரிவுரையாளர்கள், தற்காலிக உதவி பேராசிரியர்கள் பயன்பெறுவார்கள் என்று திரு கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லக்கண்ணுவுக்கு மாநில அரசு சார்பில் இறுதி மரியாதை செலுத்தப்பட்டது.

பின்னர் அவரது உடல் சென்னை மருத்துவக்கல்லூரிக்கு தானமாக வழங்கப்பட்டது.

<<<<<<>>>>>>

தென் தமிழகம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலையையொட்டியுள்ள பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு ஓரிரு இடங்களில் மிதமான

**மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் திரு. வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.**

***(Sound Byte — துரை — 30 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

**மயிலாடுதுறையில் இன்று திறந்துவைக்கப்பட்ட கவிஞர் வேதநாயகம் பிள்ளை, தியாகி சாமி நாகப்பப் படையாச்சி ஆகியோரது சிலைகளுக்கு மாநில அமைச்சர் திரு மெய்யநாதன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.**

**----------------**

**திருவண்ணாமலையில் பள்ளி மாணவர்கள் பங்கேற்ற கண்தானம் குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.**

**---------------**

**அய்யா வைகுண்ட சுவாமி பிறந்த தினத்தை முன்னிட்டு, அடுத்த மாதம் 4-ஆம் தேதி தூத்துக்குடி மாவட்டத்துக்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.**

**-----------------**

தாய்லாந்திலிருந்து கடத்தி வரப்பட்ட ஆறு கோடி ரூபாய் மதிப்புடைய போதைப்பொருள் சென்னை விமான நிலையத்தில் பறிமுதல் செய்ப்பட்டது.

--------------

கும்பகோணத்தில் நடைபெறும் மாசி மக தீர்த்தவாரியை முன்னிட்டு அடுத்த மாதம் இரண்டாம் தேதி தஞ்சாவூர் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

-----------------

சென்னை குடிநீர் தேவைக்காக ஆந்திர மாநிலம் கண்டலேரு அணையிலிருந்து விடுவிக்கப்பட்ட தண்ணீர், இன்று பூண்டி ஏரியை வந்தடைந்தது. கண்டலேறு அணையிலிருந்து வினாடிக்கு 500 கனஅடி தண்ணீர் விடுவிக்கப்படுகிறது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை டுவெண்டி — டுவெண்டி கிரிக்கெட் சூப்பர் 8 போட்டியில் இந்தியா இன்று ஜிம்பாப்வே அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

----------------

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் ஜம்மு காஷ்மீர் அணிக்கு எதிரான ஆட்டத்தில் மூன்றாவது நாளான இன்று கர்நாடகா அணி முதல் இன்னிங்சின் ஆட்டநேர இறுதியில் **5** விக்கெட் இழப்பிற்கு **220** ரன் எடுத்துள்ளது.

**Hubballi-**ல் நடைபெற்றுவரும் இப்போட்டியில் ஜம்மு காஷ்மீர் அணி முதல் இன்னிங்சில் **584** ரன் எடுத்துள்ளது.

**<<<<<<END>>>>**